1993 மார்ச் 31]

(3) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் செயல்முறைகள் குறித்து பொது நிறுவனங்கள் குழு அளித்த 10-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள மேல் நடவடிக்கை பற்றிய குழுவின் 105 வது அறிக்கை.

(4) 1984-85ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின்மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய குழுவின் 106-வது அறிக்கை. நன்றி, வணக்கம்.

7. அரசினர் சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன் வடிவு அறிமுகம் செய்தல். 1993ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு நிதியமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.